

# பரமாத்மா பாபா

தொகுப்பும் தமிழும் ஞானசேகரம் குகஞானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமாத்மா பாபா

(தனது பரமாத்ம தத்துவத்தைப் பற்றி
பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா ஆற்றிய
உரைகளிலிருந்து சில).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : 1000 பிரதிகள்.

திகதி: 22.7.94
அச்சிடுவோர் : AICO (PVT) LTD.

தொகுப்பும் தமிழும் : ஞானசேகரம் குகஞானி.

வெளியீடு:
சாயி அன்பர்கள்
சாயி இல்லம்
அரசடி ஒழுங்கை
தாவடி, இலங்கை.

விலை :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமாத்மா – பாபா.

(1) நல்லவர்களைப் பாதுகாப்பதற்கும் தீயோர்களை அழிப்பதற்கும் தர்மத்தை திடமாக ஊன்றுவதற்கும் யுகத்துக்கு யுகம் நான் வந்து அவதரிக்கிறேன். எப்போது உலகை அசாந்தி சூழ்ந்து மூடுகிறதோ அப்போது பிரசாந்தியைச் சம்பாதிக்கும் வழிகளை ஸ்தாபித்து, மக்களெல்லாம் சாந்திப் பாதையில் செல்வதற்குரிய வழிகளை மீளக் கற்றுக் கொடுப்பதற்காக மனித உருவத்தை தரித்து நான் வருகிறேன். இப்போது இல்லங்கள், பாடசாலைகள், சமூகங்கள், சமயங்கள், நாடுகள், நகரங்கள் இவற்றில் சாந்தியையும், சமாதானத்தையும், குழப்பங்களும், பூசல்களும் அபகரித்துக் கொண்டு போய் விட்டன.

எப்போது கடவுள்வந்து அவதரிப்பார் என சாதுக்களும் மஹான்களும் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். சாதுக்கள் வேண்டிப் பிரார்த்திக்க நான் வந்து அவதரித்திருக்கிறேன். எனது முக்கிய பணி வேதங்களை பாதுகாப்பதும், பக்தர்களை ரட்சிப்பதும். உங்கள் சீலம், உங்கள் சுயகட்டுப்பாடு, உங்களுடைய பற்றற்ற நிலை, உங்களுடைய நம்பிக்கை, உங்களது சிரத்தை இவற்றிலிருந்தே மக்களெல்லாம் எனது மகிமையை கற்றறிந்து கொள்வது. சற்றேனும் அகங்காரத்தின் தடயமின்றி எனது கைகளில் உங்களை நீங்கள் பூரணமாக எப்போது ஒப்படைக்கிறீர்களோ அப்போது தான் உங்களை ஒரு பக்தன் என்று நீங்கள் சொல்லிக் கொள்ளலாம். அதன் பின்னர் தான் அவதாரம் தரும் பேரானந்த அனுபவத்தை நீங்கள் அனுபவித்து மகிழலாம். ஒரு மனிதனைப் போன்று அவதாரம் நடந்து கொள்வது எதற்கெனில் தங்களைப் போல ஒருவர்தான் அவருமென்று மனித சமூகம் புரிந்து கொள்ளவே. ஆனால் அவர் அமானுஷ்ய நிலைக்கு மேலே உயர்ந்து நிற்பது, அவ்வுயரத்துக்கு மனித வர்க்கமும் உயர வேட்கை கொண்டு, அத்தகைய வேட்கை மூலம் அவரிடம் அவர்கள் போய்ச் சேர்வதற்கே. மனித உருவில் அவர் வந்திருக்கும் பணி, உங்களுள் உங்களை முடுக்கி இயக்கிக் கொண்டிருக்கும் கடவுளை புரிந்து கொள்வதற்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ம வழிக்குப் புறம்பானவர்கள் என அடையாளம் காணப்பட்ட ஓரிரு எதிரிகளையே ராமர், கிருஷ்ணர் போன்ற அவதாரங்கள் வதம் செய்து அதன் மூலம் தர்மத்தை ஸ்தாபிக்க வேண்டியிருந்தது. ஆனால் இன்றோ யாருமே நல்லவர்களாகத் தெரியவில்லை. எனவே யாருக்கு கடவுளின் பாதுகாப்பு தேவை? தீய குணங்களால் எல்லோருமே களங்கப்பட்டிருக்கிறார்கள். எனவே எல்லோரையுமே பூண்டோடு களைய இவ்வவதாரம் முற்படின் யார்தான் உயிரோடு எஞ்சப் போகிறார்கள்! இதனால் மனிதர்களின் புத்தியை பல்வேறு வழிகளில் சரிப்படுத்துவதற்காகவே நான் வந்திருக்கிறேன்.

(2) பூமிக்கு நடுவே இருக்கும் புட்ட பர்த்தி என்னும் ஊரில் ஆத்ம தத்துவமே மனித உருவில் வந்திருக்கிறது. சாந்தியையும் சௌபாக்கியத்தையும் உலகெங்கனும் பரப்பும் சக்தி இங்கு தான் குடியிருக்கிறது. உலக மக்களுக்கு சாந்தி, பிரேமை, ஆனந்தம், தர்மம் இவற்றைப் பரப்பும் நோக்கத்திற்காக எல்லா வகையான தர்மங்களும் சாந்தியும் பிரேமையும் நிறைந்த பரமாத்மாவே சத்திய சாயியின் உருத்தரித்து வந்துள்ளது.

(3) எனது சமநோக்கு, எனது சாந்தி, எனது பிரேமை, எனது பொறுமை, எனது ஆனந்தம் இவற்றை வளர்ப்பதற்கு நீங்கள் முயற்சி செய்யாது எனது பெயரையும் எனது உருவத்தையும் சும்மா கும்பிடுவதால் என்ன பிரயோசனம்?.

என்னைப்பற்றி சிலர் எழுதிய நூல்களில் அற்புதங்கள் என்று வர்ணிக்கப்படும் சில நிகழ்ச்சிகளை நீங்கள் வாசித்து விட்டு இதுதான் சாயியின் தன்னிகரில்லாத் தத்துவம் என்று வியாக்கியானம் செய்கிறீர்கள். ஆனால் இவ்வற் புதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாமென்று நான் கூறுகிறேன். அந்த முக்கியத்துவத்தைப் பற்றி அளவுக்கு மிஞ்சிப் புளுக வேண்டாம். மிக முக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேடமான சக்தி எதுவெனில் அது எனது பிரேமையே. வேண்டுமெனில் பூமியை ஆகாயமாகவும் ஆகாயத்தை பூமியாகவும் மாற்ற என்னால் முடியும். ஆனால் தெய்வீக சக்திக்கு அடையாளம் அதுவன்று. பொறுமையும், எங்கும் வியாபகமானதும், என்றுமுள்ளதுமான பிரேமையே தெய்வீக சக்தியின் நிகரற்ற அடையாளம். இவ்வுண்மையை நான் உங்களுக்கு கூறவே வேண்டும். உங்களுள் நூறு பேர்களில் தொண்ணூற்றொன்பது பேர்களுக்கு எனது உண்மையைப் பற்றித் தெரியாது.

இன்றோ நாளையோ இடைவிடாத தவத்தாலோ அன்றி தீவிரமான விசாரணையாலோ மானிட சமூகம் முழுவதுமே இம்முயற்சியில் ஒன்று சேர்ந்து ஒத்துழைப்பினும் உண்மையில் எனதுண்மையை உங்களால் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் சிறிது காலத்தின் பின்னர் இத் தெய்வீக உருவையும், இத்தெய்வீகப் பெயரையும், தரித்திருக்கும் இத் தெய்வதத்துவம் சொரியும் பேரானந்தத்தை நீங்கள் கண்டு கொள்ளப் போகிறீர்கள். இச் சந்தர்ப்பத்தை உங்களுக்குத் தரும் உங்கள் நல்லதிர்ஷ்டமோவெனில் சாதுக்கள், ரிஷிகள், யோகிகள், முனிவர்கள், ஏன் தெய்வங்களுக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்திலும் மிக மேலானதாகும்.

நான் உங்களோடு சேர்ந்து உலாவித்திரிவதாலும் உங்களைப் போல் உண்பதாலும் உங்களோடு பேசுவதாலும் இது ஒரு சர்வசாதாரணமான ஒரு மனிதன் தானே என்னும் மயக்கத்தில் நீங்கள் விழக்கூடும். இத்தவறை இழைக்காதிருக்கும் வகையில் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். உங்களோடு சேர்ந்து நான் பாடுவதாலும் உங்களோடு பேசுவதாலும் நானுமே உங்களை மாயையில் மயக்குகிறேன். ஆனால் எந்நேரமும் எனது தெய்வீக தத்துவம் உங்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கப்பட நேரிடும். அந்நேரத்திற்கு ஆயத்தமாக தயாராக நீங்கள் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது "ஸர்வதைவதா ஸ்வருபாலனு தரிஞ்சின மானவாகாரமே ஏ ஆகாரம்". மனிதன் கடவுளுக்குச் சூட்டியிருக்கும் எல்லா தெய்வ உருவங்களும் நாமங்களும் வெளிப்போந்து நிற்கும் மனித உருவமே இது. இந்த "ஸர்வதைவதா ஸ்வரூப" தர்சனத்தின் பேரானந்தத்தை அனுபவிக்கும் பாக்கியம் இப்பிறவியிலேயே உங்களுக்குக் கிடைத்தது நீங்கள் செய்த நல்லதிர்ஷ்டமாகும் இன்னோர் உண்மையையும் உங்கள் கவனத்துக்கு கொண்டுவர நான் விரும்புகிறேன். கடவுள் பூமியின் கண் அவதரித்த முன்னைய சந்தர்ப்பங்களில் அவருடைய அனுக்கிரகத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் நிறைந்திருந்தும் கூட, அவ்வவதாரத்தைக் கண்டு தரிசிப்பதால் ஏற்படும் பேரானந்தம் அந்த உருவம் உலகை விட்டு மறைந்த பின்பே அருளப்பட்டது. அவ்வவதாரங்கள் மனிதர்களிடமிருந்து ஆணைப்படுத்திய பணிவுக்கும் பயபக்திக்கும் காரணம் அவ்வவதார புருஷர்களின் அமானுஷ்ய வல்லமைகள், திறமைகளையுமோ, அன்றி அவர்களின் அரச வல்லமை, தண்டிக்கும் திறன்களையோ பார்த்து உண்டான பயபக்தியிலிருந்து எழுந்ததனாலேயேயாகும் ஆனால் இச் சத்திய சாயி உருவை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். மிக மோசமான உலகாயுத வாழ்க்கையும், நம்பிக்கைசற்றேனும் அற்ற போக்கும், பணிவு பயபக்தியற்ற தன்மையும் நிறைந்து விளங்கும் இக்கால கட்டத்தில் கோடிக் கணக்கில் இவ்வுலகம் முழுவதும் இவ்வுருவத்தை வணங்குவதன் காரணம் என்ன? இதனடிப்படைக் காரணம் மனித உருவில் வந்திருக்கும் பரமாத்மாவே இது என்பதை தெளிவாக நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

அத்துடன் உலக நாடுகளெல்லாமே இப் பாரததேசத்திற்கு வணக்கம் செலுத்துவதைக் காண்பதற்கு நீங்கள் எவ்வளவு பாக்கியம் செய்திருக்கிறீர்கள்! இச் சத்திய சாயியின் உருவம் இருக்கும் போதே –இனிமேல் வரப்போகும் ஓர் திகதியிலல்லாது, உங்களோடு உங்களுக்கு முன்பு அது இருக்கும் போதே, இம் முழு உலகுமே சத்திய சாயியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமத்தை ஏத்திப் புகழும் பக்தியலைகள் அதிர்வடைந்து கொண்டிருப்பதைக் கேட்பீர்கள். இது ஒரு பிரமை தத்துவமன்று. இத்தத்துவம் சத்தியத்தைக் காக்கும் அதர்மத்தை பூண்டோடு களையும் அவ்வெற்றிக்களிப்பில் உங்கள் யாவரையும் ஆனந்த மெய்சிலிர்ப்பில் ஆழ்த்தும் இது சாயி சங்கல்பம்.

எனவே என்னுடன் தொடர்பு கொண்டிருக்கும் இப் பாக்கியத்தை இயலும் வரை பிரயோசனப்படுத்துங்கள். மேலும் நான் வழங்கிக் கொண்டிருக்கும் வழிகளில் இயலுமான வரை துரிதமாகவும், இயலுமான வரை திறமையுடனும் முயற்சி செய்யுங்கள். எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே போதுமானது. கடுந்தவத்திலும் மேலான பலனை உங்களுக்கு அது வழங்கும்.

இன்னுமொரு விஷயம். நீங்கள் விரும்புகிறீர்கள் உங்கள் இல்லங்களுக்கு நான் வரவேண்டும் என்று. அப்படி என்னைச் செய்யுமாறு நீங்கள் பிரார்த்திக்கிறீர்கள். நான் வருகை தராவிட்டாலோ, 'நான் பிறரிலும் பார்க்க ஏழை. ஒருவேளை ஆத்மீகத்தில் நான் வளர்ச்சி குன்றியவன் என்றெல்லாம் உங்களையே நீங்கள் திட்டத் தொடங்குகிறீர்கள். இவை யாவும் தேவையற்றவை. எனது இருதயத்தில் இத்தகைய பேதங்கள், வேறுபாடுகளுக்கு இடமேயில்லை. இதனை நீங்கள் நம்பக்கூடும். நம்பாமல் விடக்கூடும். ஆனால் எனது இருதயத்தின் உண்மையான துடிப்பை உங்களுக்கு நான் தெரியப்படுத்த வேண்டியிருக்கிறது. மக்களின் இல்லங்களுக்குச் செல்வதில் எவ்வித ஆவலும் எனக்கில்லை. அப்படிச் செய்யாதிருக்கும் விருப்பும் என்னிடமில்லை. நீங்கள் குடியிருக்கும் செங்கல், சீமெந்து கட்டடத்தைப் பற்றி நான் அக்கறைப்படுவதில்லை. உங்கள் இருதயங்களில் வந்து அமரவே நான் அக்கறைப்படுகிறேன். இப்பிரசாந்தி நிலையம் நான் குடியிருக்கும் வீடல்ல. எப்பொழுது உங்கள் இருதயங்கள் பிரசாந்தி நிலையங்களாக மாறுகின்றனவோ அப்பொழுதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை நான் குடியிருக்கும் இல்லமாகிறது.

இன்னுமொரு விஷயத்தையும் உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன் சற்றேனும் இனித் தாமதியாதீர்கள் தன்னிகரில்லா இப்பாக்கியத்தை உங்களால் இயலுமான வரை பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். உங்கள் விடுதலைக்கு நீங்கள் பயிற்சி செய்யவேண்டிய சாதனையை இப்போதே கேட்டுவிடுங்கள் பின்னர் என்னிடம் வரவோ என்னைக் கேட்கவோ முடியாதிருக்கும். மக்களோ கரை கடந்த ஒரே வெள்ளப் பிரவாகமாக வந்த வண்ணமிருக்கிறார்கள். என்னை மைல்களுக்கு அப்பால் நின்றே நீங்கள் தரிசிக்க வேண்டியிருக்கும் யாவருக்கும் நிழலும் வதிவிடமும் வழங்கும் உலக மரமாக ஒரு விஸ்வ விருட்சமாக இது வளரப்போகிறது. இந் நோக்கத்திற்காகவே இவ்வுருவில் இது வந்திருக்கிறது. தடையுண்டு நிற்பது, தயக்கம் இவை பற்றி இது அறியாதது. எனது பெயர் சத்தியம். எனது பிரசாரம் சத்தியம். எனது வழி சத்தியம். நானே சத்தியம்.

யுகம் ஒவ்வொன்றிலும் குறித்தவோர் பணி நோக்கி தானே அவதாரமாக தெய்வீகம் வந்து பிறக்கிறது. ஆனால் இவ்வவதாரமோ வித்தியாசமான ஒன்று. ஏனெனில் உலகையே உலுப்பிவிடும் உலகளாவிய பூசலோடு அது போராட வேண்டியிருக்கிறது. "கடவுள் யார்?" "அவர் எங்கிருக்கிறார்?" என மடத்தனமாகக் கேள்வி கேட்குமளவிற்கு பற்றைபோல் புத்தி சாதுர்யம் வளர்ந்து விட்டது. ஒழுக்கம் என்னும் போர்வையை ஒழுக்கவீனம் போர்த்தபடி பாப சகதிக்குள் மனிதனைக் கவர்ந்திழுக்கிறது. சத்தியம் ஓர் கண்ணிப் பொறி என்று கண்டனம் செய்யப்படுகிறது. நீதி, கேலி பண்ணி கைகொட்டி நகையாடப்படுகிறது. சாதுக்கள் எல்லாம் சமூக விரோதிகள் என்று சித்திரவதை செய்யப்படுகிறார்கள். எனவேதான் சத்தியத்தை ஸ்தாபித்து அதர்மத்தை அழிக்க இவ்வவதாரம் வந்திருக்கிறது. உங்களைப் போன்று உங்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடித்திரிந்து, பாடி, சிரித்து நான் உலாவினும் உங்களை எச்சரிக்கவும், திருத்தவும் திடீரென நான் உங்கள் மேல் போடவிருக்கும் அடிக்காகக் கவனமாகக் காத்திருங்கள். தவறிழைத்தவனை நான் சுட்டுப் பொசுக்குவேன் ஒழுங்க வழி செல்பவனை அவனது ஒழுக்கத்துக்காக தடவி விடுவேன். யாவருக்கும் நீதி வழங்கப்படும்.

(4) சத்திய சாயியின் தன்னிகரில்லாச் சக்தியின் தாக்கம் உலகளாவிப் பரவி வருவதால் எரிச்சலும் பணத்திலாசையும் மிக்கோர், பாரததேசப் பண்பாடுகளையும் கலாச்சாரங்களையும் கேலிபண்ணிக் குறை கூறும் பல்வேறு கதைகளை வளர்ப்பதற்கு முயலுகிறார்கள். சாயியின் கண் எவ்வித களங்கத்தையும் சுட்டக்கூடிய ஒருவர் இப்பூமிசை வந்து பிறந்துவிடவுமில்லை. இனிமேல் பிறக்கப்போவதுமில்லை. பிரேமை ஸ்வரூபமான சத்திய சாயித்தத்துவத்தின மகிமையை ஆராய்ந்து பார்க்க வல்லவர்கள் உண்மையில் ஒரு சிலரே. இத் தத்துவம் பூரண சுயநலமற்றது. பூரண தூய்மையும் பூரண தெய்வீகமும் மிக்கது.

சதுர்யுகங்களில் கலியே உண்மையில் மேலானது. அருகே நீங்கள் வரவும், ஏத்திப் போற்றவும், படித்தறிந்து கொள்ளவும் கூடிய விதத்தில் அழியாத ஆனந்த ஸ்வரூபம் உங்கள் மத்தியில் வந்திருக்கிறது. இது பஞ்ச பூதங்களாலான சாதாரண ஒரு உருவல்ல. இதை எனது பிறந்த நாள் (BIRTHDAY) என்று நீங்கள் அழைக்கிறீர்கள் இவ்வுடலுக்கோ ஓர் (BIRTHDAY) பிறந்த நாள் இருந்திருக்கலாம். ஆனால் எனக்கோ (BIRTH) பிறப்பு இல்லை.

புகழ் மாலைகளோ இமயமலை போன்று ஒரு புறம் குவிந்த வண்ணம் உள்ளது. இகழ்ச்சிகளோ மறுபுறம் இன்னொரு இமயமலை போன்று குவிந்த வண்ணமுள்ளது. இருப்பினும் நானோ இவை இரண்டாலும் பாதிக்கப் படுவதில்லை. சில நிமிடங்களுக்கு முன்னர் கோகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( GOKAK ). சொன்னபடி இவ்விரண்டு மலைகளிலுமே எனது கைகளை வைத்து அவ்வவர்க்கு உரிய பதில்களை சமமாக நான் பொழிந்த வண்ணமுள்ளேன். ஏனெனில் இருளே ஒளிக்கு பெருகூட்டுகிறது. பகலுக்கும் இரவுக்கும் ஒரே சூரியனே காரணகர்த்தா. சமமான மனநோக்கில் இருந்து விடுங்கள்.

(5) புகழ்வதனாலோ அன்றி இகழ்வதனாலோ சாயி பாதிக்கப்படுவதில்லை. சாயியை எப்படி நினைப்பினும் சாயிக்கு மகிழ்ச்சியே சாயிக்கு அளிக்கப்படும் புகழ்ச்சிக்கோ இகழ்ச்சிக்கோ சாயி பக்தன் ஒருவன் எவ்வித முக்கியத்துவமும் அளித்தலாகாது. சில தினங்களுக்கு முன்னர் ஒரு விஷயம் நடந்தது. ஒரு பெரிய கூட்டம் பிரசாந்தி நிலையத்துக்கு வந்திருந்தது. புதினப் பத்திரிகைகளில் இருந்த பெரிய செய்தி ஒன்றைப் பார்த்து விட்டு அவர்கள் வந்திருந்தார்கள். நான் அவர்களிடம் கூறினேன், புதினப் பத்திரிகைகளைப் பார்த்து விட்டுத் தான் நீங்கள் இங்கு வந்திருந்தால் நீங்களுமே வெறும் புதினப் பத்திரிகைகள் தான் என்று. புதினப் பத்திரிகைகளையோ அன்றி நூல்களையோ படித்துவிட்டு இங்கு வருவதும் வந்து விட்டுப் போவதினதும் அர்த்தம் உங்கள் பக்தி புதினப் பத்திரிகைகளுக்கும் நூல்களுக்குமேயன்றி கடவுளுக்கன்று. நீங்கள் வர வேண்டுமெனில் உங்களுக்காக அவரை நாடவேண்டுமேயன்றி நூல்களிலோ அன்றி புதினப் பத்திரிகைகளிலோ இருந்து கற்கும் விஷயங்களுக்காகவன்று.

(6) அன்புடன் சொல்லொன்றைப் பேசுவது களைத்துச் சோர்வடைந்திருக்கும் கால்களுக்கு சுகமளிக்கும் களிம்பு தடவுவது போன்றது. சாலை வழியோ அல்லது புகையிரத மூலமோ அல்லது பேருந்து மூலமோ பிரசாந்தி நிலையத்தை நீங்கள் வந்தடைகிறீர்கள். களைப்படைந்து சோர்ந்த படி நிலையத்தினுள் நுழைகிறீர்கள். நானோ வெளி விறாந்தையில் நின்றவண்ணம் ("Ah, When did you come?") 'ஆ எப்பொழுது வந்து சேர்ந்தீர்கள்?' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறேன். பாபா ஏன் இப்படிக் கேட்கிறார் என்று பிறருக்கோ சந்தேகமாக விருக்கும். அவருக்குத் தெரியாதா? நிச்சயமாக அவரைப் பற்றியோ எங்களைப் பற்றியோ அவருக்குத் தெரியும். எனவே ஏன் இந்த விசாரணை. ஆனால் 'நான் உள்நுழைந்த கணமே பாபா என்னோடு பேசினார்' என்று கேள்வி கேட்கப்பட்டவரான நீங்களோ ஆனந்தப்படுகிறீர்கள். நான் தேடுவது உங்களுக்கு ஆனந்தத்தை வழங்கும் வழிகளையே. எனக்குத் தெரிந்திருந்தும் கூட இத்தகைய கேள்விகளை நான் கேட்கிறேன். கேட்காமல் பேசாது நான் இருந்து விடின் ஏமாற்றமும் விரக்தியும் தானே உங்களுக்கு வரும்! இல்லையா? இப்படி நான் கேட்பது ஏற்கனவே எனக்குத் தெரிந்திருந்த பதிலை உங்களிடமிருந்து தெரிந்து கொள்ளவன்றி எனது சொற்கள் உங்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்குமே என்பதற்காக என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதே போலவே (" How are You?") "எப்படி சுகமாக இருக்கிறீர்களா?" என்று நான் கேட்கக் கூடும் நீங்கள் வந்திருப்பது நீங்கள் சுகமாக இருப்பதால் தான் அல்லது உங்களுக்கு சுகமில்லை யாயின் அதுவே உங்களை என்னிடம் கொண்டு வந்தது என்று நான் அறிவேன். இதுவே கவர்ந்திழுக்கும் மாயா சக்தி. அம் மாயா சக்தி பேசிடினோ, அல்லது தனது கடைக்கண் பார்வையை செலுத்திடினோ, அல்லது அது ஏதாவது செய்யிடினோ அதனால் நாம் ஆனந்தப்படுகிறோம். உங்களைப் பார்த்து நான் பேசினும் உங்களுக்கு நான் ஏதாவது புரியினும் உங்களுக்கு ஆனந்தத்தை வழங்கும் இதுவே யோகமாயை.

(7) உங்களைப் போன்று நான் உண்பதும் ,உங்களைப் போன்று நான் உலாவித்திரிவதும், உங்கள் மொழியில் பேசுவதும், உங்களைப் போன்று நடந்து கொள்வதும் உங்களுக்காகவேயன்றி எனக்காகவன்று. உங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றும் உங்களால் காணக்கூடிய ஒருவராயும் பேசக்கூடிய ஒருவராயும் கேட்கக் கூடிய ஒருவராயும் பயபக்தியோடு தொட்டுப் பார்க்கக் கூடிய ஒருவராயும் உங்களில் ஒருவராக உங்கள் மத்தியில் நான் இருப்பதனால் உங்கள் நம்பிக்கையை, உங்களன்பை, உங்கள் அர்ப்பணத்தை வென்றெடுத்து கடவுளின் பக்கம் உங்களை நான் திசை திருப்பிவிடுகிறேன். எனது திட்டம் உங்களை "சத்ய அன்வேஷகர்களாக" (சத்தியத்தைப் பேசுபவர்களாக) மாற்றுவதே. எங்கும் எல்லாக் காலங்களிலும் நானிருக்கிறேன். என் சங்கல்பம் எல்லாத் தடைகளையும் தாண்டிவிடும் உங்களுக்குள்ளே ஆழமாக உள்ள எண்ணங்களையும் வெகு கவனமாக ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் பரம ரகசியங்களையும் உங்கள் கடந்த, நிகழ், எதிர்காலங்களையும் நான் அறிவேன். நானே சர்வந்தர்யாமி; சர்வசக்தி; சர்வக்ஞன்; இருந்தும் என் வல்லமைகளை வெளி வேடத்துக்கோ கண்காட்சிக்காகவோ நான் காட்டுவதில்லை. ஏனெனில் நான் எதனைச் செய்யினும் செய்யாது விடினும் நானே ஒரு உதாரணமும் உந்து கோலும் ("My life is a Commentary on my Message") எனது வாழ்க்கை எனது செய்தியின் ஓர் விமர்சனமே.

உதாரணமாக ஒரு பெண்ணை மாத்திரம் தனியாக பேட்டிக்கு நான் அழைப்பதில்லை என்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். பத்து அல்லது பதினைந்து பேர்கள் கொண்ட குழுவாகவே பெண்களை நான் அழைக்கிறேன். பெண்களைப் பொறுத்தவரையில் ஒருவர் மிகக் கவனமாக இருக்க வேண்டும். குணங்களைக் கடந்து அப்பாற்பட்டவனாக நான் இருப்பினும் இந்த உடல் நிச்சயமாக ஆண் என்பதனால் ஆண்களும் பெண்களும் ஒருவரோடு ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவாடுவதைக் கட்டுப்படுத்தி சிறு சந்தேகத்துக்கோ, பேச்சுக்கோ இடமளிக்காது நடந்து கொள்ள வேண்டுமென்பதை ஆண் பெண் இருபாலாருக்குமே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சொற்ப நேரம் மட்டுமே என்னுடன் இருந்து விட்டு மறைந்து போவனவன்று எனது வல்லமைகள், அவை இந்திர ஜாலமன்று. தெய்வசங்கல்பத்தின் வெளி வடிவங்களே இவை யாவும். பிற உடல்களைப் போன்றே எனது உடலும் தற்காலிகமான ஓர் வீடுதான். ஆனால் எனது வல்லமைகளோ அழியாதவை. எங்கும் நிறைந்தவை; என்றுமுள்ளவை. இவ்வுடலெடுக்கப்பட்டது ஒரு குறிக்கோளுக்கே. அது தர்மத்தை ஸ்தாபிக்கவும் பிரசாரம் செய்யவுமே. அக்குறிக்கோள் முடிவடைந்ததும் நீரில் தோன்றும் நீர்க்குமிழிகளில் ஒன்று போன்று இவ்வுடலும் மறைந்து விடும்.

(8) எனது செயல்கள் மேலும், இயக்கங்கள் மேலும் யார் என்ன அபிப்பிராயம் கூறினும் அவை மாற்றப்படப் போவதில்லை. தர்மஸ்தாபனம், எனது பிரசாரங்கள் அல்லது எனது இயக்கங்களுக்கு நான் இட்டிருக்கும் திட்டங்களை நான் மாற்றப்போவதில்லை. பல வருடங்களாக இவ்வுறுதியை நான் பூண்டிருக்கிறேன். அத்துடன் நான் வந்திருக்கும் பணியில் நான் ஈடுபட்டுள்ளேன். அதாவது பிரசாந்திப் பாதையில் நம்பிக்கையை ஊட்டுவதை நான் நிற்பாட்டப் போவதே அல்லது ஒருபடி பின்வாங்கவோ போவதில்லை.

எத்தகைய பெரியவிஞ்ஞானியும் கூட தனது பரிசோதனைச் சாலையறிவைப் பாவித்து என்னைப் புரிந்து கொள்ள முடியாது. நான் என்றும் பேரானந்த மயமாகவுள்ளேன். எது நடப்பினும் எனது புன்சிரிப்பை எதுவுமே தடுத்து நிறுத்த முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு பெரிய சந்தர்ப்பம். நீங்கள் யாவருமே விடுவிக்கப்பட்டு விடுவீர்கள் என்று திடமாக நம்புங்கள். நீங்கள் ரட்சிக்கப்பட்டு விட்டீர்கள் என்று தெரிந்து கொள்ளுங்கள். நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படும். யாவருக்கும் வாழ்க்கை மகிழ்ச்சியும் ஆனந்தமும் நிறைந்து விளங்கும். பொற் காலம் (Golden Age) மீளவரும் என்பதனை நம்பப் பலர் தயங்குகிறார்கள். இத்தர்மஸ்வரூபம் சும்மா வரவில்லை என்று உங்களுக்கு நான் உறுதி யளிக்கிறேன். மனித வர்க்கத்தைப் பீடித்திருக்கும் பிரச்சனையைத் தீர்ப்பதில் இது வெற்றியடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்துப் பந்திகள் பெறப்பட்ட சஞ்சிகைகளும் நூல்களும் பக்கங்களும்.

01) சாயிபாபா – தெய்வ மனிதர் ( ஆங்கிலம்)
ஆசிரியர் சாமுவேல் சாண்ட்வீஸ்.
–பக்கங்கள் 86-91.

(2) சனாதன சாரதி சஞ்சிகை (தமிழ்)
நவெம்பர் 1989 பக்கம் –1.

(3) சத்திய சாயி பேசுகிறார் ( ஆங்கிலம் ) பகுதி – 6
இரண்டாம் பதிப்பு
பம்பாய் – பக்கங்கள் 209 - 213.

(4) சத்திய சாயி பேசுகிறார் ( ஆங்கிலம் ) பகுதி – 10
மறுபதிப்பு
பிரசாந்தி நிலைய வெளியீடு – பக்கம் 274.

(5.) சத்திய சாயி பேசுகிறார் ( ஆங்கிலம் ) பகுதி – 11
மறுபதிப்பு
பிரசாந்தி நிலையம் – பக்கம் 61.


(6) சத்திய சாயி பேசுகிறார் ( ஆங்கிலம் ) பகுதி – 7B
மறுபதிப்பு
பிரசாந்தி நிலையம் – பக்கங்கள் 4,5.

(7) சத்திய சாயி பேசுகிறார் ( ஆங்கிலம்)
பகுதி 7B மறுபதிப்பு பிரசாந்தி நிலையம் பக்கம் 69.

(8) சாயிபாபா I தெய்வ மனிதர் ( ஆங்கிலம் )
ஆசிரியர் சாமுவேல் சாண்ட்வீஸ்
– பக்கம் 90-91.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OFFSET BY: AICO (PVT) LTD.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org